Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 27, 2024

செவ்வாய்க்கிழமை ஆகஸ்ட் 27, 2024 | ஒளி: 10 கதிர் 037 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE




### எல்பிட்டிய பிரதேச சபைக்கு

## வேட்புமனு கோரல்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262ஆம் அத்தியாயமான) 26ஆம் பிரிவின் கீழ் எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளரையும் உப தவிசாளரையும் அதன் உறுப்பினர்களையும் தெரிவுசெய்வதற்கான தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் அறிவித்தல், எல்பிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரினால் திங்கட்கிழமை(26) வெளியிடப்பட்டுள்ளது.

முழுச் செய்தி P2

### தேசிய மக்கள் சக்தி ஆட்சியில்

# “புதிய அரசமைப்பு”



**எம்.பிக்களுக்கான ஓய்வூதியம் நீக்கப்படும்**
**இலவச வாகன அனுமதி பத்திரம் இரத்து**
**அமர்வுக்கான கொடுப்பனவு நிறுத்தப்படும்**
**ஒரேயொரு ஜனாதிபதி இல்லம்**
**முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் இரத்து**
**அமைச்சரவை கடுமையாக சுருங்கும்**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், புதிய பாராளுமன்றத் தேர்தல் முறைமை என்பன உள்ளிட்ட விடயங்கள் புதிய அரசமைப்பு ஊடாக இடம்பெறும். சர்வஜன வாக்கெடுப்புடன் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய உறுதிமொழியும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“வளமான நாடு - அழகான வாழ்க்கை” எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திசாநாயக்காவினால் திங்கட்கிழமை (26) கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஒவ்வொரு தலைப்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ள அந்த விஞ்ஞாபனத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் நீக்கப்படும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான இலவச வாகன அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும். சபை அமர்வில் பங்கேற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு நிறுத்தப்படும். ஜனாதிபதிக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மட்டுப்படுத்தப்படும்.

முழுச் செய்தி P2





## “24 மாதங்களில் வறுமை ஒழிப்பு”

பெண்களுக்கு முதலிடம் கொடுத்து மாதாந்தம் 20,000 ரூபாய் வழங்கி, 24 மாதங்களில் வறுமையை ஒழிக்கும் புதிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்து அடையச் செய்த தற்போதைய அரசாங்கத்தில் உள்ள தலைவர்களின் விவேகமற்ற, அக்கறையில்லாத கொள்கைகளினால் இலட்சக்கணக்கானோர் வறுமைக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். அவர்கள் வறுமையில் சிக்கி எல்லையற்ற அளவில் அசாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றனர் என்றார்.

முழுச் செய்தி P2

## ஐ.ம.ச. விஞ்ஞாபனம் வெள்ளி வெளிவரும்



ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

முழுச் செய்தி P2



## “என்னுடன் சிறந்த குழு”

ஒரு கட்சியில் அன்றி அனைத்து கட்சிகளிலும் உள்ள திறமையான அணியை ஒன்றிணைத்துக் கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வர தன்னால் முடிந்ததாகவும், தன்னுடன் இருக்கும் பொருளாதாரக் குழுவை மிஞ்ச வேறு எந்த கட்சியிலும் குழுவொன்று இல்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

முழுச் செய்தி P2

## “கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதிக்கு ஆதரவு”

■ வ.சக்தி

கிழக்கு மாகாணத்திற்கு முஸ்லிம் ஆளுநர் வேண்டும் என்று எந்தவொரு உடன்படிக்கையும் சஜித் பிரேமதாசவுடன் செய்து கொள்ளப் படவில்லை. தங்களது ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்குகளை பெறும் நோக்கில்,

முழுச் செய்தி P2




## “உயரமாயின் காவலாளி; குட்டையாயின் தொழிலாளி”

உயரம் என்றால் காவலாளி குட்டை என்றால் தொழிலாளி என்ற கொள்கைகளை என்ற கொள்கையைக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் நாட்டை ஒப்படைத்தால் நாட்டின் எதிர்காலம் மற்றும் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து எதுவும் பேச முடியாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்த தருணத்தில் நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைக்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

முழுச் செய்தி P2



## நீராட சென்றவர் மாயம்

மாரவில சிலுவை தேவாலயத்திற்கு அருகிலுள்ள கடலில் இளைஞர்கள் குழுவுடன் நீராடச் சென்ற 19 வயதுடைய இளைஞர் ஒருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலேப்புகமுவ, வெலிபன்னாகஹமுல்ல, கந்தேவத்த பகுதியைச் சேர்ந்த தருண் சந்தீப திஸாநாயக்க என்ற 19 வயதுடைய இளைஞனே காணாமல் போயுள்ளார்.

குளியாபிட்டிய பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பாடநெறியை முடித்துவிட்டு நண்பர்கள் குழுவுடன் கடலில் நீராடச் சென்ற போதே அவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



### ஒகஸ்ட் 30ஆம் திகதி

## மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சர்வதேச வலிந்து காணாமல், ஆக்கப்பட்டோர் தினத்தில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டம் வலுப்பெற அனைவரும் அணிதிரண்டு ஆதரவு வழங்குமாறு வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

“சர்வதேச வலிந்து காணாமல், ஆக்கப்பட்டோர் தினம் ஆகஸ்ட் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. வேதனைகளுடன்,



முழுச் செய்தி P2

## கொழும்பு குப்பைகளுக்கு மீண்டும் கடும் எதிர்ப்பு

■ எம்.யூ.எம்.சனூன்

கொழும்பிலிருந்து குப்பைகளை ரயிலில் புத்தளத்திற்கு கொண்டு வரும் வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (25) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து புத்தளம் நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இத்திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என கோரியே புத்தளத்தில் அமைதியான முறையில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புத்தளம் நூர் நகர் ரயில் நிலையத்திற்கு முன்பாக இந்த கவனயீர்ப்பு போராட்டம் சுமார் இரண்டு மணி நேரம் நடத்தப்பட்டது.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் தூய தேசத்திற்கான கட்சியின் தலைவர் இஷாம் மரிக்கார் உட்பட இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் சிலர் கலந்து கொண்டனர்.

பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காக கொழும்பிலிருந்து குப்பைகளை ஏற்றிய விசேட ரயில் புத்தளம் அருவக்காடு சேராக்குளி பகுதிக்கு வருகை தரவுள்ளதாக கிளீன் புத்தளம் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கிளீன் புத்தளம் அமைப்பினர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், சந்ததி காக்கும் சரித்திர போராட்டமான கிளீன் புத்தளம் இன்னும் மரணிக்கவில்லை. நீதிமன்றத்திலே இது தொடர்பாக வழக்காடி கொண்டிருக்கின்றோம். இப்படியான ஒரு சூழலில் யாருக்கும் தெரியாமல் ரயில் வண்டிகளில் குப்பை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதனை புத்தளம் சமூகத்தின் சார்பாக கிளீன் புத்தளம் அமைப்பின் சார்பாக எதிர்ப்பினை தெரிவித்தோம். அமைதியாக ஜனநாயகமுறைப்படி நடத்தப்பட்ட போராட்டம் என்றனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

## தேசிய மக்கள் சக்தி ஆட்சியில்

# “புதிய அரசமைப்பு”





முன்னாள் ஜனாதிபதிகளுக்கும், அவர்களின் வாழ்க்கைத்துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியம், விசேட கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் இல்லாதொழிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தங்களுடைய ஆட்சியின் கீழ் அமைக்கப்படும் அமைச்சரவையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை தலா 25 ஆக மட்டுப்படுத்தப்படும். இராஜாங்க அமைச்சு பதவிகள் நீக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது,

தேர்தல் விஞ்ஞாபனத்தை மத தலைவர்களுக்கு வழங்கிய பின்னர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க உரையாற்றுகையில்,

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்குப் பதிலாக மாற்று முறைமையைச் செயற்படுத்தும். அனைத்து மக்களுக்கும் சார்பான வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்டவாட்சி கோட்பாட்டைச் செயல் வடிவில் அமுல்படுத்துவோம்” என்றார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக 2015 -2019 வரையான காலப்பகுதியில் முன்னெடுத்த செயற்பாடுகளை முடிவுறுத்தி, அனைத்து இன மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் வகையிலான புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம். தமிழர்களின் மொழி உரிமையை அரச நிர்வாகத்தின் ஊடாக உறுதிப்படுத்துவோம். அரச நிர்வாகத்தில் தமிழர் ஒருவர் தமிழ் மொழியில் கேள்வி எழுப்பும் போது அவருக்குத் தமிழ் மொழியில் பதிலளிப்பதைக் கட்டாயமாக்குவோம் என்றார். .

அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து உண்ணும் நிலைமை மாற்றம் பெற வேண்டும். தேசிய உணவு உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தைக் கட்டம் கட்டமாகச் செயற்படுத்துவோம்.

பொருளாதார முன்னேற்றத்தின் பிரதிபலனை நியாயமான முறையில் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிப்போம். நடுத்தர மக்களை ஏழ்மையில் வைத்துக்கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது. பாடசாலை கல்வி கட்டமைப்பை மறுசீரமைப்போம். உணவு, கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கான வற் வரியை நீக்குவோம். நீர் மற்றும் மின்சார கட்டணத்தையும் குறைப்போம் என அனுரகுமார திஸாநாக்க மேலும் தெரிவித்தார்.

## எல்பிட்டிய பிரதேச சபைக்கு

# வேட்புமனு கோரல்

அதன்படி, தேர்தலுக்கான வைப்புப் பணம் கையேற்றல் இன்று திங்கட்கிழமை 26ஆம் திகதியிலிருந்து 2024 செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் (இக்காலத்திற்கு இடைப்பட்ட 2024 ஆகஸ்ட் 31, 2024 செப்டெம்பர் 01, 07, 08 ஆகிய தினங்களில் (சனி, ஞாயிறு தினங்கள் தவிர்ந்த) பெயர் குறித்த நியமனங்களின் கையேற்றல் 2024 செப்டெம்பர் 09ஆம் திகதியிலிருந்து 2024 செப்டெம்பர் 12ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் காலி மாவட்ட செயலகத்தில்/ அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# “24 மாதங்களில் வறுமை ஒழிப்பு”

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் கந்தளாய், சேருவில நகரில் திங்கட்கிழமை (26) முற்பகல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு வாழ்க்கைக்கான வழிகள் இன்றி தெளிவான வருமான வரிகள் இன்றி, ஒவ்வொரு நாளுக்கும் மூன்று வேளை உணவையும் பெற்றுக் கொள்ள முடியாத வறிய மக்களுக்காக ஜனசவிய, சமூர்த்தி, அஸ்வெசும, மற்றும் கெமிதிரிய ஆகிய வேலைத் திட்டங்களில் உள்ள சிறந்த விடயங்களை ஒன்றாகச் சேர்த்து, அவற்றின் குறைபாடுகளை நீக்கி, சிறந்த வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்தார்.

. உணவுத் தேவை, உணவு தேவை அல்லாத வேறு தேவைகள், சேமிப்பு, நுகர்வு, முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டும், வறுமை ஒழிப்பு திட்டத்தின் ஊடாக மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாய் வழங்கி, 24 மாதங்களில் வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ந்து யாரும் வறுமையில் இருக்கக் கூடாது. வறுமை எனும் அடிமைத்தனத்திற்குக் கட்டுப்படாது. பல்வேறு நிகழ்வுகளினாலும் அரசாங்கத்தின் விவேகம் அற்ற, அக்கறை இல்லாத கொள்கை திட்டங்களினால் மக்கள் வறுமையில் சிக்கி இருக்கின்றார்கள். வறுமையிலிருந்து கொண்டு கையேந்துகின்ற, சமூகமொன்றை உருவாக்காது, அபிமானம் உள்ள மக்கள் வாழ்கின்ற, எமது நாட்டில் எவருடைய அடிமை சேவகர்களாக இல்லாமல் தன்னம்பிக்கையுடன், தன்னிறைவோடு எழுந்து நிற்க நம்பிக்கை உள்ள சமூகம் இருப்பதால் குறிப்பிட்ட காலத்துக்குள் வறுமையை இல்லாது செய்வோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# “என்னுடன் சிறந்த குழு”

அந்தக் கட்சிகளில் இருக்கும் சிலர் தான் அரசியலுக்குக் கொண்டு வந்தவர்கள் என்பதால் அது தொடர்பில் தனக்கு நன்றாகத் தெரியும் என தெரிவித்த ஜனாதிபதி, ஜனாதிபதி யார் என்பது தொடர்பில் அன்றி, மக்களை வாழ வைப்பது தொடர்பிலே போட்டியிருப்பதாகவும், கேஸ் சிலிண்டரை தேடிச் சென்ற யுகத்துக்கு முடிவு கட்டுவதற்கே இம்முறை வாக்களிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (25) மாலை நடைபெற்ற சட்ட வல்லுனர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

“பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான சட்டத்தரணிகள்” எனும் தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள், ஜனாதிபதி சட்டத்தரணிகள் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் உட்பட சட்டத்தரணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

திருடர்களைப் பிடிப்பது தொடர்பில் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் திருடர்களைப் பிடிக்கும் பொறுப்பை ஜே.வி.பி ஏற்றுக்கொண்டது. பொலிஸ் உத்தியோகத்தரோ சட்டத்தரணியோ அல்லாத ஆனந்த விஜேபால நியமிக்கப்பட்டதோடு 400 கோப்புகள் தொடர்பில் அவர் செயற்பட்டார். பிரதமர் என்ற ரீதியில் தான் தேவையான ஏற்பாடுகளை மாத்திரம் வழங்கியதாகத் தெரிவித்த ஜனாதிபதி, எலிகளைப் பிடிக்கப் பற்கள் உள்ள பூனை இருக்க வேண்டும் எனவும், பூனைக்குப் பற்கள் இல்லையென்றால் அதனை ஏசிப் பயனில்லை எனவும் தெரிவித்தார்.

ஆட்சியில் இடைவெளி வைக்கக் கூடாது என்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்னிடம் கூறினார். அதனால்தான் நான் பிரதமர் பதவியை ஏற்றேன். அக்காலகட்டத்தில் நாட்டில் நிலவிய நிலைமையைச் சொல்லத் தேவையில்லை. பங்களாதேஷில் அந்த இடைவெளி ஏற்பட்டது. திருமதி ஷேக் ஹசீனா பதவி விலகியபோது, அரசாங்கத்தை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அந்த இடைவெளியின் காரணமாக அவர்களுக்கு பெரும் இழப்பைச் சந்திக்க நேரிடும். இந்த நாட்டின் பிரதமர் பதவியையேற்க எவரும் முன்வரவில்லை. ஆனால், நான் தனியொரு ஆசனம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர். என்னைப் பிரதமராகப் பொறுப்பை ஏற்கச் சொன்னார்கள். அந்தப் பொறுப்பை ஏற்காமல் நான் ஓடியிருந்தால் பாரிய விபரீதம் ஏற்படும். அது ஒரு கோழைத்தனமான செயல்.

எதிர்க்கட்சித் தலைவர்தான் மாற்றுப் பிரதமர். எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சி அமைக்க வேண்டும் என்று அந்த சமயம் நான் கூறினேன். நெருக்கடி ஏற்படும்போது எதிர்க்கட்சியிலிருந்து ஒத்துழைக்கத் தயார் என்று கூறினோம். சஜித் பிரேமதாசவுடன் எனக்கு எந்த பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால் கடைசியில் பிரதமர் பதவியை ஒப்படைத்தபோது வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். அவரைப் போல நானும் ஓடிப்போனால் அது கோழைத்தனமான செயல். எனது அனுபவத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையை என்னால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை இருந்ததால் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன் என்றார்.

# “கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதிக்கு ஆதரவு”

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் வேண்டுமென்றே மீண்டுமொரு இன மோதலை ஏற்படுத்தும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது என தெரிவித்துள்ள முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, கட்சி முடிவெடுத்தால் நான் ஜனாதிபதியை ஆதரிப்பேன், எனது கட்சியின் தீர்மானம் தான் இறுதி தீர்மானமாகும் என்றார்.

கிழக்கு மாகாண ஆளுநர் விவகாரம் தொடர்பிலும், உடன்படிக்கை குறித்தும் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையில் நாட்டின் ஜனாதிபதியை அழைத்து எனது பல்கலைக்கழகத்தை மீட்டுத் தந்தவரைத் திறந்து வைப்பதற்கு அழைத்த போது அவர் வருகை தந்தார் இதற்கும் அரசியலுக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை. எனது மகனின் திருமண வைபவத்தின் போது ஜனாதிபதி ரணில் மற்றும் சஜித் எல்லோரும் வந்திருந்தனர். தனிப்பட்ட வாழ்க்கையில் இவ்வாறான அரசியல் உறவுகளைத் தவிர்க்க முடியாது.

“எனது கட்சி முடிவெடுத்தால் நான் உங்களை ஆதரிப்பேன் என்று ஜனாதிபதியிடம் நான் சொன்னேன் . எனது கட்சியின் தீர்மானம் இறுதி தீர்மானம் ஆகும். எனக்கும் அவருக்கும் உறவில் எவ்வித பிரச்சனை இருக்காது. அவை தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்” என்றார்.

தங்கள் கட்சிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவுக்கும் இடையில் எது வித பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இது ஓர் அப்பட்டமான பொய், கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களின் அடிப்படை முக்கியமான தேவைகள் பற்றி நாம் அவருடன் கலந்துரையாடினோம். கிழக்கு மாகாணத்திற்கு முஸ்லிம் ஆளுநர் வேண்டுமென்று நாங்கள் எந்தவோர் ஒப்பந்தமும் அவருடன் செய்யவில்லை.

இது வேண்டுமென்றே தமிழ் முஸ்லிம் உறவுகளைச் சீரழிப்பதற்காகவும் இதன் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தூண்டி தங்களது ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்குகளைப் பெற வேண்டி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் வேண்டுமென்றே இவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

# ஐ.ம.ச. விஞ்ஞாபனம்...

ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் திங்கட்கிழமை (26) நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மாபெரும் கவனயீர்ப்பு...

துன்பங்களுடன் பல ஆண்டுகளாக தங்களுடைய உறவுகளைத் தேடிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் என்ற சொற்பதம் உருவாகக் காரணமானவர்கள் தங்களுடைய துரோகத்தின் வெளிப்பாடாகத் தமிழ்மக்களை வேதனைப்படுத்திக் கொண்டேயிருக்கின்றார்கள்.

சுமார் 15 ஆண்டுகாலமாக இன்னும் இதற்கு ஒரு தீர்வு இல்லை. இறுதிப் போரின் போது ஒப்படைக்கப்பட்டவர்களைக் காணாது படும் வேதனையில் ஏக்கத்துடன் இருக்கும் பெற்றோர்களில் சிலர் இறந்தும் விட்டார்கள் அதுகொடுமை.

இந்த நிலையில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கில் யாழிலும், கிழக்கில் திருகோணமலையிலும் காலை 10 மணியளவில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளார்கள். இந்த போராட்டம் வலுப்பெற அனைவரும் திரண்டு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்”

# “உயரமாயின் காவலாளி...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக கம்பஹா மாவட்டம் திவுலப்பிட்டி தொகுதியின் தேர்தல் செயற்பாட்டுக் காரியாலயத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (25) கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்ததாவது;

“நாட்டை நேசிக்கும் மக்கள் எப்பொழுதும் எம்மை பூர்வீக இலங்கையர்கள் என்றே குறிப்பிடுகிறார்கள். 2015 இல் மஹிந்த தோல்வியடைந்த போது, பௌத்த துறவி, வைத்தியர், ஆசிரியர், விவசாயி மற்றும் தொழிலாளர் ஆகிய ஐந்து பெரும் சக்திகளை ஒன்று திரட்டும் நம்பிக்கையுடன் மொட்டு உருவாக்கப்பட்டது. மொட்டை ஆரம்பித்து மொட்டுடன் இணைந்து செயற்பட்டதன் பின்னர் நாட்டின் உள்ளூராட்சி சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றோம். உள்ளூராட்சி தேர்தலில் 90% வெற்றி பெற்றோம். ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் மக்கள் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்து கோட்டாபய வெற்றி பெற்றார். பாராளுமன்றத்தில் 2/3 அதிகாரம் எமக்கு இருந்தது. வேலை தொடங்கிய உடனேயே கோவிட் தொற்றுநோயால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அரசாங்கம் என்ற வகையில் எங்களால் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியவில்லை.



நாங்கள் அன்று அமைச்சரவையில் இருந்தோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கு இருந்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு இருந்தார். அங்கு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இருந்தார். நாமல் ராஜபக்ஷ 05 அமைச்சுகளுடன் அமைச்சு வைத்திருந்தார். அமைச்சர் சமலும் உடனிருந்தார். நமது அமைச்சரவையில் 1/5 பங்கு ராஜபக்ஷவினர். அந்த அமைச்சரவையில் நானும் இருந்தேன். அன்று ஐம்பெரும் படைகளைத் திரட்டச் சென்ற நம்மால் அது முடியவில்லை. மற்றவர்கள் தான் அறிவுரை கூறினார்கள்.

அரசாங்கம் கவிழ்ந்தது, அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட்டது. அதற்கு வேறு காரணங்களும் இருந்தன. இலங்கைக்குப் பணம் அனுப்ப வேண்டாம் என்று ஜே.வி.பி கூறியதை நினைவில் கொள்ளுங்கள். திருடன் என்று கூறி எல்லோருக்கும் ஏசினார்கள். மக்களிடையே பொய்கள் பரப்பப்பட்டன. நாட்டை வீதிக்கு இழுத்து அரசியல் ஸ்திரமின்மையை உருவாக்க உழைத்தார்கள். நாங்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறினோம். ஆனால் நாங்கள் அழைக்கப்பட்டோம். எதிர்க்கட்சித் தலைவரை நாட்டைப் பொறுப்பேற்கச் சொன்னோம். நிபந்தனையின்றி உதவுவோம் என்றோம். அரசாங்கங்களைக் கவிழ்க்க முடியும். அரசைக் கவிழ்க்க முடியாது என்பதாலேயே அவ்வாறு செய்தார்கள். எல்லோரும் பொறுப்பேற்க முடியாது என்று சொன்னபோது ரணில் விக்ரமசிங்க மட்டும் ஏற்றுக்கொண்டார்.

சஜித் பிரேமதாச அவர்களால் ஏதாவது செய்ய முடியுமா? பல ஆண்டுகளாக எதுவும் செய்யவில்லை. உயரம் என்றால் காவலன், குட்டையானவன் என்றால் தொழிலாளி என்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைத்தால், நாட்டின் எதிர்காலம், குழந்தைகளின் எதிர்காலம் பற்றி எதுவும் பேச முடியாது. இந்த தருணத்தில் நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைக்கக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க மட்டுமே” என்றார்.

# "நாம் வாழ்வதற்கு ரணில் ஆள வேண்டும்"

இந்நாட்டு மக்கள் இன்னும் வாழவேண்டுமாயின், தற்போதைய ஜனாதிபதியும் சுயேச்சை வேட்பாளருமான ரணில் விக்ரமசிங்க மீண்டுமொருமுறை ஆள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

பிட்டகோட்டையில் அமைந்துள்ள கட்சி தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், "ஐக்கிய தேசியக் கட்சி என்பது எப்பொழுதும் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றி கொண்ட கட்சி. பல தலைவர்களை உருவாக்கிய கட்சி. வெள்ளைக்காரர்களிடம் இருந்து நாட்டை மீட்டு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர் டி.எஸ்சேனநாயக்க.. உணவு பாதுகாப்பு சவாலை ஏற்று உணவு கொடுத்தவர் டட்லி சேனாநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்தன திறந்த பொருளாதாரத்தை அறிமுகம் செய்து நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தினார். வறுமையை ஒழித்து வீட்டுத் திட்டம் கொண்டுவர ஆர்.பிரேமதாச பங்காற்றினார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு சவாலில் இருந்து நாட்டை மீட்டவர் ரணில் விக்ரமசிங்க. அவரின் தலைமைத்துவம் இன்று நாட்டுக்கு அவசியம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்த போதெல்லாம் நாட்டை மீட்டது ஐ.தே.க தான். ஏனைய தலைவர்கள் வாய்ப்பேச்சில் மாத்திரம் தான் வீரர்களாக இருந்தனர். ரணில் விக்ரமசிங்க செயலில் பங்காற்றி வருகிறார்.

அடுத்த 5 வருடங்களுக்கு அவரின் தலைமைத்துவம் நாட்டுக்கு அவசியம். அவரின் வெற்றியைப் பெருவெற்றியாக்குவதற்கு கிராமம் கிராமமாக்கச் சென்று பணியாற்றுமாறு கோருகிறேன்" என்றார்.



அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான

# "கொடுப்பனவை அதிகரிக்கவும்"



அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என சர்வதேச இந்து மத பீடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை முழுவதும் உள்ள அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமய நூல் பெறும் பொருட்டு வருடாந்தம் 5,000 ரூபாய் மட்டும் வழங்கப்படுகின்றது.

இதனை 10 ஆயிரம் ரூபாய்வாக அதிகரிப்பதற்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரேரணையாகக் கொண்டு வந்தவேளை, அரச மாற்றம் காரணமாக அது கைகூடவில்லை. எனவே, ஜனாதிபதி இதனை கருத்தில் எடுத்து, பல அறநெறி ஆசிரியர்கள் இது சம்பந்தமாகக் கலந்துரையாடி 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அதுமட்டுமல்ல, கொரோனா காலத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுத்திருந்த சீருடைகளும் வழங்கப்படவில்லை. எனவே, மீண்டும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்குவதுடன் இந்த வருடாந்த கொடுப்பனவை 25,000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளரும் சர்வதேச இந்து மத பீடச் செயலாளருமான கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அறநெறி பாடசாலைகள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சார்பாக இக்கோரிக்கையை விடுத்துள்ளார். எனவே, ஜனாதிபதி இவ்விடையத்தில் கருத்தில் கொள்வார் என்பதில் ஐயமில்லை என சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# கடத்தவிருந்த பீடி இலைகள் மீட்பு

எஸ்.ஆர்.ஆர்.லெம்பேட்

பாம்பன் அடுத்த அக்காள் மடம், வடக்கு பாக் ஜலசந்தி கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக, படகில் பதுக்கி வைத்திருந்த இந்திய மதிப்பிலான 5 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 780 கிலோ பீடி இலை கட்டுக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.



இதற்கமைய, கடத்தலுக்குப் பயன்படுத்திய வாகனம் மற்றும் நாட்டுப் படகை பாம்பன் பொலிஸார் பறிமுதல் செய்து கடத்தலில் ஈடுபட்ட தங்கச்சி மடத்தைச் சேர்ந்த ஒருவரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

பாம்பன் அடுத்த அக்காள் மடம் வடக்கு கடல் பகுதியில் இருந்து நாட்டுப்படகில் பீடி இலை பண்டல்கள், இலங்கைக்கு கடத்த இருப்பதாக பாம்பன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை(25) தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகளின் இலங்கை மதிப்பு சுமார் 12 இலட்சம் என தெரிய வருகிறது.

# நியமனம்



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் பிரதேச அமைப்பாளராக ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளரான பொறியியலாளர் எம்.எஸ்.நழீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தேசியத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமினின் அறிவுறுத்தலுக்கு அமைவாகக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

உடன் செயற்படும் வகையில் இந்நியமனம் வழங்கப்படுவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவராகவும் ஏறாவூர் பிரதேச அமைப்பாளராகவும் பதவி வகித்த அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதால் அவர் கட்சியில் இருந்து இடைநிறு த்தப்பட்டிருப்பதை அடுத்தே கட்சியின் ஏறாவூர் பிரதேச அமைப்பாளராக பொறியியலாளர் எம்.எஸ். நழீம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குளவி கொட்டியதில் எழுவர் பாதிப்பு



கெ.தி.பெருமாள்

குளவி கொட்டுக்கு இலக்காகி ஏழு தொழிலாளர்கள் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மவுசாக்கலை தோட்ட சீர்பாதம் பிரிவில் தேயிலை தோட்டத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே, குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கிய ஏழு தொழிலாளர்களும் ஆண்கள் என மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# தனிப்பட்ட தகராறில் ஒருவர் பலி

கொழும்பு- மருதானை, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தையில் நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை (25) இரவு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் நெட்வொர்க் இன்ஜினியரிங் கற்கும் 19 வயதுடைய மாணவனுக்கும் 44 வயதான பிசியோதெரபிஸ்ட் ஒருவருக்கும் விடுதியில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் அலுமினிய குவளையால் தலையில் தாக்கப்பட்டு 44 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவருக்கும், தாக்குதலை மேற்கொண்ட நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்ததுள்ள மருதானை பொலிஸார், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

# யானையால் சாரதி பலி

வி.ரி.சகாதேவராஜா

பொத்துவில் ஊறணிப் பகுதியில் சனிக்கிழமை(24) நள்ளிரவு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருக்கோவில் பிரதேச சபையில் வாகன சாரதியாக பணிபுரியும் அ.மனமோகன் என்பவரே இத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இறைவரி திணைக்களம் விடுத்துள்ள எச்சரிக்கை

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில் சில மோசடி குழுக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று வரிப் பணத்தை வசூலிப்பதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைப்பதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.


கொழும்பு, பாணந்துறை, நீர்கொழும்பு, வென்னப்புவ, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென திணைக்களத்தின் மத்திய குழு குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் வரி வகைகள் தொடர்பான வரிப்பணத்தை அரச வங்கிகளில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்குகளில் மாத்திரம் வைப்பிலிடுமாறு உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் வரி செலுத்துவோரை அறிவுறுத்துகின்றனர்.

மாறாக பணம் அல்லது காசோலைகள் எதுவும் வசூலிக்கப்பட மாட்டாது எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை கவனத்திற்கொண்டு செயற்படுமாறும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

அத்தகைய மோசடிக்காரர்களிடம் சிக்கியிருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு உள்நாட்டு இறைவரி திணைக்களம் மக்களை கோரியுள்ளது.



# நியமனம்

கேகாலை மாவட்டம், தெரணியகல தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய மக்கள் கூட்டணியின் புதிய அமைப்பாளராக எம்.பரணிதரன் வெள்ளிக்கிழமை (23) நியமிக்கப்பட்டார்.

# பொலிஸ் உத்தியோகத்தர் பணி இடைநீக்கம்

பு.கஜிந்தன்

ஊர்காவற்றுறை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குறிகட்டுவான் பகுதியில் சனிக்கிழமை (24) இரவு கடமையில் இருந்த போது மது போதையில் இருந்ததாக கூறி பணியிடை நீக்கப்பட்டுள்ளார்.

மேலும் அவர் வீதியால் சென்ற பொதுமகனிடம் இலஞ்சம் பெற முயன்றதோடுஅவர் மீது தாக்குதலும் மேற்கொண்டுள்ளார்.

இதில் பாதிக்கப்பட்டவர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிறுத்தி உள்ளனர்.

இந்நிலையில், குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தலா ஒரு இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்வதற்கு அனுமதி அளித்திருந்தார். அத்துடன் அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "பிள்ளைகளின் பாதுகாப்பு சாதிகளின் கைகளிலே"



பாறுக் ஷிஹான்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் சாரதிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது கல்முனை பிரதேச செயலகத்தில் திங்கட்கிழமை (26) நடைபெற்றது.

"பிள்ளைகளின் பாதுகாப்பு சாதிகளின் கைகளிலே" எனும் தொனிப் பொருளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சமூக உள நல அதிகாரி யூ. எல். அசார்தீன் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது.

இதன் போது கல்முனை, சாய்ந்தமருது மற்றும் கல்முனை தமிழ் பிரிவிலுள்ள பாடசாலை சேவையில் ஈடுபடும் 40 மேற்பட்ட சாரதிகள் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி வழிகாட்டலில் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பளீல் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரிகள் மற்றும் கல்முனை பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் சாரதிகளுக்கான 1929 ஸ்டிகர்களும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இது தவிர பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் சாரதிகளின் குறை நிறைகள் ஆராயப்பட்டதுடன் கருத்துக்கள் ஆலோசனைகள் என்பனவும் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அவமானம் என்ற கற்பிதத்தை உடைத்தெறிய வேண்டும்

பெண்கள் மீதான வன்முறை குறித்து எழுதத் தேவையே இல்லாத நாளுக்காக இன்னும் எத்தனை ஆண்டுகள் நாம் காத்திருக்க வேண்டும்? ஆண்-பெண் பேதத்தைக் கடந்து விட்டோம், பெண்கள் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் போன்ற வெற்றுப் பரப்புரைகளை நீர்த்துப்போகச் செய்கின்றன ஒவ்வொரு நாளும் நடக்கும் சம்பவங்கள்.

நீங்கள் இதைப் படித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், உலகில் ஏதோவொரு மூலையில் ஒரு பெண்ணோ, பல பெண்களோ வன்முறைக்கு இலக்காகிக் கொண்டிருக்கலாம். அப்படிப் பாதிக்கப்படுகிற அனைவருமே அதிலிருந்து மீண்டு எழுவதற்கான சாத்தியம் ஏதும் இல்லாத இந்தச் சமூகத்தில், பெண்கள் எப்படித்தான் பிழைத்திருப்பது?

ஒவ்வோர் ஆண்டும் பாலியல் வன்முறை வழக்குகள் ஆயிரக்கணக்கில் பதிவு செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த எண்ணிக்கையை நினைத்து ஆசுவாசம் கொள்வதா? அல்லது பெண்கள் மீது ஏன் இத்தனை வன்மம் என வேதனைப்படுவதா?

ஆறு வயதுக்கும் குறைவான குழந்தைகளில் தொடங்கி 60 வயதைக் கடந்த பெண்கள் வரை பாலியல் வன்முறைக்கு ஆளாகி இருப்பது தெரியவருகின்றது. உண்மையில் இத்தனை குற்றங்கள் தான் நடந்திருக்கின்றன என்று உறுதியாகச் சொல்ல முடியாத அளவுக்குப் பதிவு செய்யப்படாத வழக்குகளின் எண்ணிக்கை அச்சமூட்டுகிறது.

நமது நாட்டை பொறுத்தவரையில், அவ்வப்போது அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பல சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வருவதே இல்லை. சில சம்பவங்கள் காலம் கடந்தேனும் அம்பலமாகிறது. தகவலை மறைத்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படும்போது, ஏனையோரும், வாயை மெதுவாகத் திறக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தரப்பினர், தங்களுக்கும் தங்களுடைய குடும்பத்தினருக்கும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமோ அல்லது குடும்ப மானம் கப்பலேறி விடுமோ என்ற அச்சத்தில், மௌனமாக செத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவைப் பொறுத்தவரையில், மிகப் பயங்கரமான சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

நமது நாட்டில் இடம்பெறும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை பார்க்குமிடத்து, அவர்கள் பாதிக்கப்பட்ட குழந்தை, சிறுமி, பெண்கள் மற்றும் வயோதிப பெண்களுக்கு மிக நெருக்கமானவர்களாகவே இருப்பர். உறவு முறையானவர்களே சம்பத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பர். அந்த அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது. சமூகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்றால், குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை, ஏனையோருக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். இல்லையேல் மீண்டும், மீண்டும் அதே மாதிரியான குற்றங்களையே செய்வர்.

தனிமனித ஒழுக்கம், பெண்களை மதிக்கும் பண்பு ஆகியவற்றை முன்னிறுத்தாத சமூகத்திலிருந்து கொண்டு பண்பாடு, பாரம்பரியம் குறித்து வாய்கிழியப் பேசி என்ன பயன்? எங்கிருந்தோ ஒரு மீட்பர் வருவார் என்று பெண்கள் காத்திருக்கத் தேவையில்லை. தற்காப்பே பெண் பாதுகாப்பு என்பதைச் செயல்படுத்த வேண்டும்.

வெளியே சொன்னால் அவமானம் என்ற கற்பிதத்தை உடைத்து, தனக்கு நேர்ந்த கொடுமைகளுக்குத் துணிந்து நின்று போராட வேண்டும். அப்படிப் போராடுகிற பெண்களுக்குப் பக்க பலமாக நிற்பதோடு, ஏனைய பெண்களுக்கும் சமூகத்திலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான வழிமுறைகளை அனைவரும் இணைந்து செய்யவேண்டும் என்பதை மீண்டும், மீண்டும் நாமும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




முதலில் மாற்றப்பட வேண்டியது

# மக்களை விற்றுப் பிழைக்கும் அரசியல்

மொஹமட் பாதுஷா

'மாற்றம்... மாற்றம்...' என்று சொல்லிக் கொண்டே இருக்கின்றோம். நாட்டில் எந்தவொரு ஒரு பிரச்சினை ஏற்பட்டாலும், 'இந்த சிஸ்டம் சரியில்லை', ஆளுகைக் கட்டமைப்பு உள்ளிட்ட முறைமைகளில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தையே மகக்ள் வெளியிடுகின்றனர்.

'மாற்றம்' என்பது மேல் மட்டத்தில் இருந்து, கீழ் நோக்கி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற மனப்பாங்கின் வெளிப்பாடாகவே இதனைக் கருத முடிகின்றது.

மாறாக, அரசியல் ஆளுகையில் ஏற்படுகின்ற கட்டமைப்பு மாற்றமே 'சிஸ்டம் சேன்ஜ்' இற்கு அடிப்படையானது என்றால், அதற்காக ஒவ்வொரு தனிமனிதனும், சமூகமும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளத் தவறி விடுகின்றோம்.

ஆகவே, நாம் விரும்புகின்ற மாற்றம் நிகழவேண்டுமென்றால், ஒவ்வொரு சமூகத்தின் அரசியல்வாதிகளையும் மாற்றியமைப்பதில் இருந்து அப்பணியை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

மக்களை முட்டாள்களாக்கி அரசியல் செய்கின்ற, சமூகத்தை விற்றுப் பிழைக்கின்ற நமது அரசியல்வாதிகளை மாற்றியமைப்பதன் மூலம், இந்த மாற்றத்தைத் தொடக்கி வைக்கலாம் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், முக்கியமாக நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்களில் சில மாற்றங்களைக் கொண்டு வர வேண்டியுள்ளது. அவர்கள் தமது நடத்தைகளில் மாற்றங்களைக் கொண்டு வரவில்லை என்றால், அவர்களையே மாற்றிவிடுவதுதான் சமூக தர்மம் என்பதையும் மறந்து விடக் கூடாது.

நாட்டு மக்கள் பொதுவாகவும், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் குறிப்பாகவும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. மாற்றத்தை அடிமட்டத்தில் இருந்து கொண்டு வராததன் காரணமாகத் தமிழர்களின் அரசியலும் முஸ்லிம்களின் அரசியலும் கெட்டுக் குட்டிச் சுவராயிருப்பது மட்டுமன்றி, அந்த அரசியல்வாதிகள் மக்களைப் பிழையாக வழிநடத்தவும் செய்கின்றனர்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக உரிமை அரசியலின் பெயரால் ஏமாற்றப்பட்டு வருவதாகவே தெரிகின்றது. அந்த அரசியல் மூலம் சிலவற்றைச் சாதித்துள்ளனர் என்பதை மறுக்க முடியாது. ஆயுதப் போராட்டத்திற்கும் இத்தனை இழப்புக்களுக்கும் ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது நியாயமானது.

ஆனால், இத்தனை காலமும் மக்கள் இழந்த இழப்புக்களுக்கு போதுமான உரிமைகளோ ஏனைய சமூகங்களைப் போன்ற அபிவிருத்திகளோ அம்மக்களைச் சென்று சேரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்நிலையில், இப்போது தமிழர் அரசியல் பல துண்டங்களாகி அரசியல் செய்வதன் ஊடாக, மக்களைப் பிரித்தாளுகின்றது.

நாட்டின் ஜனாதிபதியை மாற்றுவது அல்லது நமக்கு விருப்பமான ஒருவரை ஆட்சியாளராகக் கொண்டு வருவது எல்லாம் ஒருபுறமிருக்க, சாதாரண தமிழ் மக்கள் 'வாயால் வடை சுடுகின்ற' இந்தப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய காலம் வந்துள்ளது என்றே தோன்றுகின்றது.

இலங்கையில் மிகவும் வஞ்சிக்கப்பட்ட மக்கள் பிரிவினர் என்றால், அது மலையக மக்கள்தான். அவர்கள்தான் அடிப்படை உரிமைகளுக்காக நூறு வருடங்களுக்கும் மேலாக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் சமஷ்டிக்காகவோ சுயநிர்ணயத்திற்காகவோ அல்லது இன, மத உரிமைகளுக்காகவோ போராடவில்லை. தாங்கள் இந்த நாட்டில் ஏனைய மக்களைப் போல, வாழ்வதற்கான உரிமைகளுக்காகவே தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், மலையக அரசியல்வாதிகள் எந்த நிலையில், இருக்கின்றார்கள் என்பதை நாம் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம்.

இந்திய நடிகைகளைக் கொண்டு வந்து மக்களுக்கு 'புதினம் காட்டுகின்ற' அளவுக்குத் தரம் கெட்டுப் போயுள்ளது இவர்களின் அரசியல்... மலையகத்தில் ஏதோ ஒரு அடிப்படையில் அரசியல்வாதிகளிடையே இருந்துவந்த ஒற்றுமை தற்போது சீர் குலைக்கப்பட்டுள்ளதை அவர்களது வெட்கக் கேடான தெருச்சண்டைகள் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

மக்களை விற்றுப் பிழைக்கின்ற விடயத்தில் முதலிடத்தில் இருப்பவர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள்தான். முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள், பிரச்சினைகள், அபிவிருத்தி சார் நலன்கள் என்று சொல்லிக் கொண்டு அனைத்து முஸ்லிம் கட்சிகளும் தலைவர்களும் எம்.பிக்களும் தமது சொந்த அரசியல் பிழைப்பையே செய்து கொண்டிருக்கின்றனர்.

எம்.எச்.எம்.அஷ்ரபின் காலத்தில் இருந்த அளவுக்குக் கூட சமூகநலன் சார்ந்த அரசியலை இப்போது மருந்துக்குக் கூட காணக் கிடைப்பதில்லை.

இதற்கு முதலாவது காரணம் அஷ்ரபின் மறைவுக்குப் பின்னர் பிரதான முஸ்லிம் கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகப் பதவியேற்ற றவூப் ஹக்கீமும் அவருடன் அன்றிருந்த ஏனைய அரசியல்வாதிகளும் ஆவர். ஏனென்றால், ஸ்தாபக தலைவரின் மறைவுக்குப் பின் தங்கள் மீது இருந்த பாரிய சமூகப் பொறுப்பை அவர்கள் உணர்ந்து செயற்பட்டதாகத் திருப்தி கொள்ளமுடியாது.

இரண்டாவது காரணம் முஸ்லிம் சமூகமாகும். அதாவது, தமது அரசியல்வாதிகள் தவறான வழியில் பயணிக்கின்றார்கள் என்பதை தெளிவாக அறிந்திருந்தும், அதனைத் தட்டிக்கேட்காத அல்லது மாற்றத்தைக் கொண்டுவராத மக்களுக்கும் இதில் பொறுப்புள்ளது.

இன்று இதே வழியில்தான் றிசாட் பதியுதீனின் மக்கள் காங்கிரஸும் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸும் பயணித்துக் கொண்டிருக்கின்றது. ஏனைய சிறு அணிகள் இதைவிட மோசமாகும். ஒரே விதமான சரக்கு, ஒரே மாதிரியான வாடிக்கையாளர்கள் (மக்கள்) ஆனால், விளம்பரங்கள் மட்டும் வேறு வேறு என்றுதான் இதனைச் சொல்லமுடிகின்றது.

இதற்கிடையில், பெருந்தேசியக் கட்சிகளில் ஒட்டிக் கொண்டு அரசியல் செய்கின்ற முஸ்லிம் எம்.பிக்ளும் அண்மைக்காலமாகக் குறிப்பாக வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்ட முஸ்லிம் அரசியலுக்குள் மூக்கை நுழைக்கத் தொடங்கியிருக்கின்றனர் என்பது வேறு கதை.

முஸ்லிம் அரசியல்வாதிகள் எத்தனையோ தடவை இந்த சமூகத்தின் உரிமைகளை, பிரச்சினைகளை, அடையாளத்தை, தனித்துவத்தை ஏன் கௌரவத்தையும் கூட விற்றுப் பிழைத்திருக்கின்றார்கள். இன்னும் இந்தப் போக்கு மாறவில்லை.

ஒரு பக்கம் இணைந்து தேர்தல் கேட்டுவிட்டு, மறுதரப்பை 'இனவாதிகள்' என முத்திரை குத்திவிட்டு, பிறகு மறு பக்கத்திற்குத் தாவி பதவிகள் மற்றும் வெகுமானங்களைப் பெற்றுக் கொண்டனர். ஒரு கட்சியில் தலைவரும் எம்.பிக்களுக்கும் 'தண்ணீருக்கும் தவிட்டுக்குமாய்' ஆளுக்கொரு பக்கம் இழுத்துக் கொண்டு ஓடுகின்றனர்.

அமைச்சுப் பதவிகளையும் வருவாயையும் இலக்கு வைத்து இன்று வரை முஸ்லிம் எம்.பிக்கள் குத்துக்கரணம் அடிப்பது தொடர்வதை காண்கின்றோம். தேசியப் பட்டியல் எம்.பிக்காகவே அரசியல் செய்தவர்களும் தேசியப் பட்டியல் எம்.பியை எடுத்துக் கொண்டு மறுபக்கம் பாய்ந்த அமீர் அலி போன்றவர்களையும் நாம் கண்டிருக்கின்றோம்.

இவ்வாறான குரங்குத்தனமான அரசியலால் பல தடவை ஒட்டுமொத்த முஸ்லிம் அரசியலும் வெட்கித் தலைகுனிய நேரிட்டது. முஸ்லிம் சமூகத்தை நோக்கிப் பிற சமூகங்களிலிருந்து பல கேலிக் கதைகளும் கேள்விக் கணைகளும் வீசப்பட்டன. ஆனால், 'ரோசம் இல்லாதவன் ராசாவிலும் பெரியவன்' என்ற தோரணையிலேயே முஸ்லிம் அரசியல்வாதிகள் இன்று வரை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக, ஏனைய சமூகங்கள் கேள்வி எழுப்பிய அளவுக்குக் கூட முஸ்லிம் சமூகம் இது பற்றி தம்முடைய அரசியல் தலைவர்களிடம், மக்கள் பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பவில்லை. புத்திஜீவிகளோ, சிவில் சமூகமோ, தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகமோ அல்லது பள்ளிவாசல்களோ முஸ்லிம் அரசியல் தலைவர்களின் தவறுகளுக்கு எதிராக எழுந்து நிற்கத் தவறிவிட்டன.


கடந்த 25 வருடங்களில் எத்தனையோ தேர்தல்கள் வந்தன. பல ஜனாதிபதிகள் ஆட்சி செய்தனர். ஏகப்பட்ட முஸ்லிம் அரசியல் அணிகள் மட்டுமன்றி பெரும்பான்மைக் கட்சிகளின் முஸ்லிம் எம்.பிக்களும் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டதை மறுக்க முடியாது.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் தலைவர்கள் மற்றும் இந்த கால் நூற்றாண்டில் எம்.பி. கதிரையைச் சூடாக்கியவர்களும் இந்த முஸ்லிம் சமூகத்தின் எந்த நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கின்றார்கள்? ஏதனை உருப்படியாகச் செய்துள்ளார்கள்?

தேர்தல்கள், சட்டமூலங்கள், பாராளுமன்ற வாக்கெடுப்புக்கள் வந்தபோது, சமூகத்தின் மானத்தை அடமானம் வைத்து அரசியல் செய்தவர்கள், ஏதோ பெரிய உடன்பாட்டின் அடிப்படையிலேயே ஆதரவளிப்பதாகக் கூறிய தலைவர்கள், அதன் பின்னர் எதனையும் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுக்கவில்லை என்பது கண்கூடு.

எனவே, இந்த கோணத்தில் பார்க்கின்ற போது, இந்த முறை தேர்தலில் நாங்கள் இந்த வேட்பாளரையே ஆதரிக்கின்றோம். அவரே முஸ்லிம்களுக்கு நல்லது செய்வார். அதற்கான உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டுள்ளோம் என்று கூறுவதை நம்பினாலும், அதுவெல்லாம் நிறைவேற்றப்படும் என்பதை எந்த அடிப்படையில் நம்புவது என்றுதான் தெரியவில்லை!

ஆகவே, தமிழ் மக்களைப் போல, முஸ்லிம் மக்களும் 'ஆட்சியாளர்கள் பிழை' என்று கூறிக் கொண்டிருப்பதை விட, முதலில் தமது அரசியலுக்குள் இருக்கின்ற சமூகத்தை விற்றுப் பிழைக்கின்ற போக்கை மாற்றியமைப்பதுதான் பயனைத் தரும்.



## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனதை வதைக்க, அவர்களுக்கு உரிமை இல்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடி இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயல் படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகிறது.

மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. லட்சத்தில் ஒரு வினாடி பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகிறது. எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயல் படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகிறது. மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. லட்சத்தில் ஒரு வினாடி பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகிறது. அத்துடன் தேவையற்ற விடயங்களையும் அசை போடுகின்றது.

இதனால் தேகம் அல்லாடும். எனவே, மனிதன் நிம்மதியாக வாழ, புலன் அறிவைத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். நல்லதை மட்டும் உறிஞ்சும் திறனை வளர்த்திடுக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# உடனடியாக நடவடிக்கை எடுங்கள்



கிளிநொச்சி - கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட பெரியகுளம் கனகராயனாற்றுப் பகுதியில் பல ஏக்கர் காணிகள் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்போடு சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகராயன் ஆற்றினை அண்டிய பெரிய குளம் பகுதியிலும் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் சுமார் 25 அடி ஆழத்துக்கும் மேலாக அதிக அளவில் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


குறித்த பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட வருவது தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதும், இதுவரை குறித்த மணல் அகழ்வை கட்டுப்படுத்த எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை. எனவே உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– யது பாஸ்கரன்



# குரங்கம்மை

**'மங்கி பாக்ஸ்' எனப்படும் குரங்கம்மை நோய் உலக அளவில் வேகமாக பரவி, பொதுமக்களிடையே அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.**



விமானத்தில் பயணிப்பவர்கள் மூலம் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எளிதாக ஊடுருவி விடுவதால், விமான நிலையங்களில் கண்காணிப்பும், கடும் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நோய் பற்றியும், அதன் தன்மை குறித்தும், அது ஏற்படுத்தும் அச்சுறுத்தல்கள், மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள் குறித்து இந்த தொகுப்பில் பார்ப்போம்.

### ஒருவருக்கு குரங்கம்மை நோய் எப்படி பரவும்?

முக்கியமாக விலங்குகளிடம் இருந்து மனிதனுக்கு பரவுகிறது. அதேவேளையில், ஒரு மனிதனிடம் இருந்து மற்றவர்களுக்கு பரவுவதும் சாத்தியம். குறிப்பாகப் பாதிக்கப்பட்ட நபரிடம் இருந்து மற்றொருவருக்கு நெருங்கிய தொடர்பு மூலமாகவும், சுவாசத் துளிகள் மூலமாகவும் பரவக்கூடும்.

குரங்கம்மையால் பாதிக்கப்பட்டுள்ள விலங்குடன் நெருங்கிய தொடர்பு கொள்வதன் மூலமாகவும், அந்நோய்ப் பாதிப்புக்குள்ளான விலங்குகளின் இறைச்சியை உண்பதன் மூலமாகவும் பரவும்.

மனிதர்களைப் பொறுத்தவரை குரங்கம்மை பாதிக்கப்பட்டவருடன் உடல் ரீதியாக நெருங்கிய தொடர்பில் இருப்பது, அவர்களின் உடைகள், படுக்கை அறை, துண்டு போன்றவற்றை உபயோகிப்பது மூலம் பரவும்.

உமிழ்நீர், சுவாசத் துளிகள் (தும்மல், இருமல்) மூலமும், கருவில் வளரும் குழந்தைக்கு தாயின் நஞ்சுக்கொடி மூலமும் எளிதில் பரவக்கூடும்.

### குரங்கம்மை நோய்க்கு தடுப்பூசி உள்ளதா?

சின்னம்மை ஒழிப்பு திட்டத்தின் போது, பயன்படுத்தப்பட்ட தடுப்பூசிகளை இந்த நோயிலிருந்து தற்காத்துக்கொள்ளப் பயன்படுத்தலாம். இருப்பினும், 1980க்கு உலக அளவில் சின்னம்மை ஒழிக்கப்பட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்ததைத் தொடர்ந்து இந்தியாவில் தடுப்பூசி எதுவும் தயாரிக்கப்படவில்லை.

'ஜென்னோஸ்டம்' என்ற பெயருடைய தடுப்பூசியைக் குரங்கம்மை, சின்னம்மை நோய்க்குப் பயன்படுத்த அமெரிக்கா உரிமம் பெற்றுள்ளது.

குழந்தைகளுக்கு இந்த நோய் எளிதில் பரவி, கடும் பாதிப்பை ஏற்படுத்துவதால் தற்காப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவது அவசியமானது.

### குரங்கம்மையின் அறிகுறிகள் என்ன?

காய்ச்சல், முகம், கைகள், கால்கள், கண்கள், வாய் அல்லது பிறப்புறுப்புகளில் கொப்புளங்களுடன் கூடிய கடுமையான தோல் வெடிப்பு மற்றும் நிணநீர் கணுக்களில் வீக்கம் ஆகியவை முக்கியமான அறிகுறிகள்.

காய்ச்சல் ஏற்பட்ட முதல் 3 நாட்களுக்கு சொறி உணர்வு ஏற்படலாம். முதலில் வாய், நாக்கு பகுதியில் புண்கள் தோன்றும். பின்பு முகத்தில் சொறி உணர்வு தோன்றி, 24 மணி நேரத்திற்குள் கை, கால்கள் என உடலில் மற்ற பகுதிகளுக்கு பரவி கொப்புளங்களாக மாறும்.

4, 5ஆவது நாளில், கொப்புளங்கள் பெரிதாகிவிடும். 2ஆவது வார முடிவில், அவை உலர்ந்து விடும். அதனுடன் தொடர்புடைய மற்ற சில அறிகுறிகளாக ஆஸ்தீனியா (கடுமையான உடல் பலவீனம்), தலைவலி, தசை வலி, உடல் வலி, முதுகு வலி, தொண்டை புண், இருமல், வியர்வை, உடல் குளிர்ச்சி ஆகியன தேன்றும்

> **நிமோனியா, மூளை அழற்சி, கண் நோய்த்தொற்றுகள் [பார்வை இழப்புக்கு வழிவகுக்கக்கூடும்] மற்றும் மரணம் போன்ற பாதிப்புகளுக்கு வழிவகுக்கும். எனவே, ஆரம்ப நிலையிலேயே முறையான சிகிச்சைகளை மேற்கொள்வது அவசியமானது**

### சின்னம்மை போன்றது தானா?

குரங்கம்மையும் சின்னம்மை போன்ற போஸ் விரிடி குடும்பத்தை சேர்ந்தது. நோய் அறிகுறிகளும் கிட்டத்தட்ட சின்னம்மை போலவே இருக்கும். ஆனால் கூடுதலாக நிணநீர் அழற்சியையும் (நிணநீர் கணுக்களில் வீக்கம்) ஏற்படுத்தும்.

சின்னம்மையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அறிகுறி ஏற்படாது. அத்துடன், சின்னம்மையுடன் ஒப்பிடும்போது, இறப்புக்கு வழிவகுக்கும் அச்சுறுத்தலையும் குரங்கம்மை நோய் கொண்டிருக்கிறது.

மறுபுறம் சின்னம்மையை பொறுத்தவரை வேரிசெல்லா-ஜோஸ்வர் வைரஸ் மூலம் ஏற்படுகிறது. இருப்பினும், சின்னம்மை, குரங்கம்மை இவை இரண்டும் சுவாசம் மற்றும் தோல் தொடர்பு மூலம் பரவுகின்றன.

### குரங்கம்மை என்றால் என்ன?

இது வைரஸ் ஜூனோடிக் நோயாகும். அதாவது விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவும் வைரஸ் தொற்று.

### இந்தியாவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?

கேரளாவில் மார்ச் மாதத்தில் முதல் நோய் தொற்று பதிவானது. சுமார் 30 பேர் இந்த நோய் தொற்று அறிகுறிகளுக்கு ஆளாகியுள்ளனர். இருப்பினும் குரங்கம்மை வைரஸ் தொற்று அதிகரிப்பதற்கான அபாயம் குறைவாக இருப்பதாகவும், பீதி அடைய தேவையில்லை என்றும் சுகாதாரத்துறை கூறியுள்ளது.

### குரங்கம்மையை எவ்வாறு தடுப்பது?

* அறிகுறிகள் தென்பட்டால் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து விலகி தனிமையில் இருக்க வேண்டும். உடனே மருத்துவரை அணுகவும்.
* நோய் பாதிப்புக்குள்ளான அல்லது சந்தேகிக்கப்படும் நபருடன் நெருங்கிய தொடர்பைத் தவிர்க்கவும்.
* நோயாளியுடன் தொடர்பில் இருக்கும் படுக்கை, பாத்திரங்கள் போன்ற எந்தவொரு பொருளையும் தொடுவதை தவிர்க்கவும்.
* கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
* பாதிக்கப்பட்ட நபரின் கொப்புளத்தைத் தொடுவதை தவிர்க்கவும்.

### முதல் நோய்த்தொற்று எப்போது உறுதிபடுத்தப்பட்டது?

1970 கொங்கோ நாட்டில் ஒரு குழந்தை இந்த நோய் பாதிப்புக்குள்ளானமை கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் அந்த குழந்தைக்கு பெரியம்மை தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. தொடர் பரிசோதனையின் முடிவில் குரங்கம்மை தொற்றுக்குள்ளாகி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. குரங்குகளை தவிர அணில், அந்நாட்டை சேர்ந்த ஒரு வகை எலி, டார்மிஸ் போன்ற விலங்குகள் மூலமும் இந்த வைரஸ் தொற்று பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### இந்த நோய் கொடியதா?

குரங்கம்மை அறிகுறிகள் சில வாரங்களுக்குள் தானாகவே மறைந்துவிடும். ஆனால், சிலருக்கு இரண்டாம் நிலை நோய்த்தொற்றுகளான நிமோனியா, மூளை அழற்சி, கண் நோய்த்தொற்றுகள் (பார்வை இழப்புக்கு வழிவகுக்கக்கூடும்) மற்றும் மரணம் போன்ற பாதிப்புகளுக்கு வழிவகுக்கும். எனவே ஆரம்ப நிலையிலேயே முறையான சிகிச்சைகளை மேற்கொள்வது அவசியமானது.

### குரங்குகளால் இந்த நோய் பரவுகிறதா?

1958இல் சிங்கப்பூரில் இருந்து டென்மார்க் ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்ட குரங்குகள் நோய் பாதிப்புக்குள்ளாகி, இந்த நோய் பரவியது. எனவே, 'குரங்கம்மை' என்று அழைக்கப்படுகிறது.

# காதலனை கரம் பிடித்தார்



**2010** ஆம் ஆண்டில் 'மதராசப்பட்டினம்' திரைப்படத்தில் நடித்து கதாநாயகியாக அறிமுகமாகினார் நடிகை எமி ஜாக்சன். தொடர்ந்து 'தாண்டவம்', 'தங்க மகன்', 'கெத்து', 'தெறி' மற்றும் பல வெற்றிப் படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

எமி ஜாக்சனுக்கு ஏற்கெனவே ஜோர்ஜ் என்பவருடன் திருமணமாகி ஒரு மகன் இருக்கிறார். சில காரணத்தினால் விவாகரத்து செய்துக் கொண்டனர்.

இந்நிலையில், 2022ஆம் ஆண்டு எமி, பிரித்தானிய நடிகரான எட் வெஸ்ட்விக்கை காதலிக்க தொடங்கினார். நீண்ட நாட்கள் காதலர்களாக வலம் வந்த இந்த ஜோடி, தற்போது திருமணம் செய்துக் கொண்டனர்.

இதனையடுத்து, எமி அவரது திருமண புகைப்படங்களை இன்ஸ்டகிராமில் பதிவிட்டுள்ளார்.



# படப்பிடிப்பு தளத்தில் பாட்டி வைத்தியம்

மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவான 'வாழை' திரைப்படத்தில் நடித்த திவ்யா துரைசாமிக்கு படப்பிடிப்பு தளத்தில் 'கர்ணன்' படத்தில் நடித்த பாட்டி, வைத்தியம் செய்த படங்கள் வைலாகி வருகின்றன.

'வாழை' திரைப்படம் அண்மையில் வெளியாகி நல்ல விமர்சனங்களை பெற்று வரும் நிலையில், இந்த படத்தில் ஒரு முக்கிய கேரக்டரில் நடித்துள்ள திவ்யா துரைசாமி, வாழைத்தார்களை தலையில் உண்மையாகவே தூக்கி வைத்து நடித்த நிலையில், அவரது கழுத்து சுளுக்கி கொண்டுள்ளது.

இந்த நிலையில், படப்பிடிப்பு தளத்தில் இருந்த கிராமத்து பாட்டி, திவ்யா துரைசாமிக்கு கழுத்தை தேய்த்து விட்டு சுளுக்கு எடுத்தார்.

இதுகுறித்த வீடியோவை திவ்யா துரைசாமி தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்து 'இந்த பாட்டியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? 'கர்ணன்' திரைப்படத்தில் 'ஒரு முத்தம் வேணா கொடுத்துட்டு போ' என்று சொல்வாரே அந்தப் பாட்டி தான் என்று தெரிவித்தார். மேலும், இவருடைய உதவியால் தான் 50 முதல் 70 கிலோ கிராம் வரை எடையை தூக்கி 'வாழை' படத்தில் நடித்ததாகவும் திவ்யா துரைசாமி கூறியுள்ளார்.



# மூன்றாம் பாகத்துக்கு எத்தனை ஆண்டுகள்?



வெற்றிமாறன் இயக்கத்தில் சூரி மற்றும் விஜய் சேதுபதி நடித்த 'விடுதலை' திரைப்படம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் வெளியான நிலையில், ஒன்றரை வருடங்கள் கடந்த பின்னரும் இன்னும் இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பே முடியவில்லை என்றும் இந்த ஆண்டு இறுதியில் வெளியாகும் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், 'விடுதலை 2' படத்தின் ரன்னிங் டைம் மொத்தம் 4 மணி நேரத்திற்கு அதிகமாக இருப்பதால் 'விடுதலை' படத்தின் மூன்றாம் பாகத்தையும் வெளியிட வெற்றிமாறன் உட்பட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

'விடுதலை' வெளியீட்டுக்கு பின்னர், இரண்டாம் பாகத்திற்கு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் எடுத்துக்கொண்ட இயக்குநர் வெற்றிமாறன், மூன்றாம் பாகத்துக்கு எத்தனை ஆண்டுகள் எடுத்துக் கொள்வாரோ என்று ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஏற்கெனவே சூர்யா நடிப்பில் வெற்றிமாறன் இயக்கத்தில் உருவாக இருக்கும் 'வாடிவாசல்' திரைப்படத்தின் அறிவிப்பு வெளியாகி இரண்டு வருடங்களாகியும் படப்பிடிப்பு தொடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# வெங்கட் பிரபுவின் அடுத்த ஹீரோ




இயக்குநர் வெங்கட் பிரபு தளபதி விஜய் நடிப்பில் உருவான 'கோட்' திரைப்படத்தை இயக்கியுள்ள நிலையில், இந்த படம் செப்டம்பர் 5ஆம் திகதி வெளியாகயுள்ளது.

இந்த நிலையில், இயக்குநர் வெங்கட் பிரபு, சிவகார்த்திகேயன் நடிக்கும் படத்தை இயக்க இருக்கிறார் என்றும் கூறப்பட்டது.

அண்மையில். வெங்கட் பிரபு அளித்த பேட்டியில், "எனது அடுத்த படம் சிவகார்த்திகேயன் படம் தான், ஆனால், அதே நேரத்தில் சிவகார்த்திகேயன் ஏற்கெனவே சில படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளதால் அந்த படங்களை முடித்துவிட்டு அவர் வரும்வரை நான் காத்திருப்பேன்" என்று தெரிவித்துள்ளார்.

சிவகார்த்திகேயன் தற்போது 'அமரன்' திரைப்படத்தில் நடித்து முடித்துள்ள நிலையில், ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கி வரும் திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

இதனையடுத்து, 'டான்' இயக்குநர் சிபி சக்கரவர்த்தி இயக்கும் படத்தில் நடித்த பின்னர் சுதா கொங்கரா இயக்கும் படத்திலும் நடிக்கவுள்ளார். அதன் பிறகுதான் அவர் வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகும் படத்தில் நடிக்கவுள்ளார்.





# கற்றுக்கொள்ள வேண்டுமா?

உளவியல் அல்லது மனோதத்துவம் (Psychology) என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் பயன்பாட்டு ஒழுங்கு முறையாகும். இந்தத் துறையின் தொழில்முறை ஆய்வாளர் ஒரு உளவியலாளர் எனப்படுவர். உளவியலாளர் சமூக நடத்தை, விஞ்ஞானிகள் என்றும் வகைப்படுத்தப்படுவர். அந்தவகையில், அமெரிக்காவின் மிசோரி பல்கலைக்கழகத்தில் உளவியல் துறையில் பி.எஸ்சி பட்டம்பெற்ற ஹனா ஹனிஃபாவுடன் ஒரு சந்திப்பை மேற்கொள்ள முடிந்தது.

*கே: உளவியலாளரும், விரிவுரையாளருமான ஹனா ஹனிஃபா, தங்களைப் பற்றி சொல்ல முடியுமா?*

நான் ஹனா ஹனிஃபா. நான் அமெரிக்காவின் மிசோரி பல்கலை கழகத்தில் உளவியலில் துறையில் பி.எஸ்சி பட்டம் பெற்றேன். மேலும் இந்தியாவில் உளவியல் சிகிச்சை மற்றும் ஆலோசனை துறைலயில் முதுகலை பட்டமும் பெற்றேன். கடந்த 13 ஆண்டுகளாக உளவியல், கல்வி, மற்றும் ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வி, ஆகியவற்றில் விரிவுரையாளராக இருக்கிறேன். நான் ஒரு மன நல ஆலோசகராகவும் பணியாற்றுகின்றேன். மேலும் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை மேம்பாடு, பொதுப் பேச்சு, உளவியல், ஆங்கிலம் மற்றும் தரப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்துவது போன்ற பல்வேறுபட்ட பட்டறைகளையும் நடத்தி வருகிறேன். இவை தவிர, நான் ஒரு எழுத்தாளராகவும் ஆராய்ச்சியாளராகவும் இருக்கிறேன்.

*கே: தனிப்பட்ட மற்றும் தொழில்முறை மேம்பாடு குறித்த பட்டறைகளை நடத்துவது பற்றி நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சி என்றால் என்ன என்பதை விளக்க முடியுமா?*

தனிப்பட்ட வளர்ச்சி என்பது தனிப்பட்ட திறன்கள், மனநிலை மற்றும் பழக்கவழக்கங்களை மேம்படுத்தும் செயல்பாடுகளின் மூலம் தன்னை மேம்படுத்தும் செயல்முறையாகும். இது சுய விழிப்புணர்வை உருவாக்குவது, புதிய திறன்களை வளர்ப்பது மற்றும் வளர்ச்சி சார்ந்த மனநிலையை வளர்ப்பது ஆகியவற்றை உள்ளடக்கியது.

தொழில்முறை வளர்ச்சி என்பது ஒருவரின் தொழில் வாழ்க்கைக்குப் பொருத்தமான புதிய திறன்களையும் அறிவையும் பெறுவதற்கான தொடர்ச்சியான செயல்முறையைக் குறிக்கிறது. இது பட்டறைகளில் கலந்துகொள்வது, சான்றிதழ்களைப் பெறுவது, மற்றும் ஒருவரின் தொழிலில் முன்னேற்றம் ஆகியவற்றைப் புதுப்பித்த நிலையில், வைத்திருக்க, உயர் கல்வியைத் தொடர்வது, ஆகியவற்றை உள்ளடக்கும். கற்றல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருப்பதால், போட்டித்தன்மையைப் பராமரிப்பதற்கும், தொழில் வளர்ச்சியை அடைவதற்கும் இது அவசியம்.

தனிப்பட்ட வளர்ச்சியும் தொழில்முறை வளர்ச்சியும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட வளர்ச்சி சுய ஒழுக்கம், உந்துதல், மற்றும் தகவமைப்பு போன்ற குணங்களை மேம்படுத்துகிறது, இது தொழில்முறை வெற்றியில் நேரடியாகத் தாக்கத்தைச் செலுத்துகிறது . மாறாக, தொழில்முறை சாதனைகள், தனிப்பட்ட நம்பிக்கையை அதிகரிக்கும். மற்றும் மேலும் சுய முன்னேற்றத்தை ஊக்குவிக்கும், இது வாழ்க்கையின் இரு பகுதிகளுக்கும் பயனளிக்கும்.

*கே: இந்த விடயங்களை பற்றி நாம் அடிக்கடி சந்தித்திருப்போம், ஆனால், அரிதாகவே கவனம் செலுத்தியிருப்போம் என நம்புகின்றேன். மேலும், நமது திறன்களை மேம்படுத்தும் நடவெடிக்கைகளையும் அரிதாகவெ எடுத்திருப்போம். எனவே, ஒரு தனிநபருக்கும், ஒரு நிறுவனத்திற்கும் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியினால் ஏட்படும் நன்மைகள் பற்றி மேலும் சொல்ல முடியுமா?*

## தனிநபர்களுக்கான நன்மைகள்:

மேம்பட்ட சுய விழிப்புணர்வு மற்றும் தன்னம்பிக்கை. ஒருவரின் சொந்த பலம் மற்றும் பலவீனங்களைப் பற்றி மேலும், புரிந்துகொள்வது, குறிக்கோள் மற்றும் நோக்கத்தின் உணர்வைப் பற்றி மேலும் விழிப்புடன் இருக்க





உதவுகிறது. குறிக்கோளின் உணர்வு தெளிவாக இருக்கும்போது, நீங்கள் எதை விரும்புகிறீர்கள், உங்களுக்கு எது சிறந்தது என்று உங்களுக்குத் தெரியும், அது தன்னம்பிக்கையையும் அதிகரிக்கிறது.

### மேம்பட்ட தொழில் வாய்ப்புகள் மற்றும் வேலையில் திருப்தி.

மேம்பட்ட, தனிப்பட்ட, மற்றும் தொழில்முறை வளர்ச்சியுடன், நீங்கள் உங்களை அல்லது உங்கள் திறன்கள் மற்றும் தகுதிகளை முன்வைக்கும்போது, நம்பிக்கையுடன் செயல்பட முடியும். மேலும், இது சிறந்த வேலை வாய்ப்புகளுக்கும், வேலையில் அதிக திருப்தியை உணர்வதற்கும் வழிகளைத் திறக்கிறது.

### மாற்றத்திற்கு ஏற்ப மாறுதல் மற்றும் சவால்களைச் சமாளிக்கும் திறன்.

நீங்கள் உங்களில் முதலீடு செய்யும்போது, வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மைகளை, மற்றும் பின்னடைவுகள் ஏற்படும்போது, நடந்துகொள்ளத் தேவையான திறன்களையும் மனநிலையையும் உருவாக்கிக்கொள்வீர்கள். இது மாற்றத்தைத் தழுவவும் நேரங்களிலும், கடினமான சூழ்நிலைகளில் தீர்வுகளைக் கண்டறியவும், தடைகளை வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக மாற்றவும் உங்களை தயார்ப்படுத்தும்.

## நிறுவனங்கள் அடையும் பயன்கள்:

உற்பத்தித்திறன் மற்றும் புதிய முறையீடுகளை மேம்படுத்துதல்.

தனிநபர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்துவதன் மூலமும், தங்கள் அறிவை விரிவுபடுத்துவதன் மூலமும், அவர்கள் புதிய யோசனைகளையும், மிகவும் திறமையான வேலை முறைகளையும் பங்களிக்கிறார்கள், இது தனிப்பட்ட வெற்றி மற்றும் நிறுவன வளர்ச்சி ஆகிய இரண்டையும் இயக்குகிறது.

### அதிக பணியாளர் திருப்தி மற்றும் தக்கவைப்பு.

ஊழியர்கள் தொழில் ரீதியாக வளர ஊக்குவிக்கப்படும்போது, அவர்கள் மதிப்பு மிக்கவர்களாகவும் உந்துதலுடனும் செயற்படுவார்கள், இது அதிக வேலை திருப்தி மற்றும் விசுவாசத்திற்கு வழிவகுக்கிறது. அவர்களின் இந்த வளர்ச்சியில் செய்யும் முதலீடு, எல்லோராலும் விரும்பப்படக்குடிய வேலை தளத்தை உருவாக்குகிறது.

### வலுவான தலைமைத்துவம் மற்றும் சிறந்த குழு இயக்கவியல்.

திறமையான தலைவர்கள் தொழில்முறை வளர்ச்சியின் மூலம் உருவாக்கப்படுகிறார்கள், மேலும் அவர்கள் சிறந்த குழுக்களை வளர்க்கிறார்கள். இது மேம்பட்ட தகவல் தொடர்பு, நம்பிக்கை மற்றும் கூட்டு வெற்றிக்கு வழிவகுக்கிறது, இது முழு நிறுவனத்தையும் மேலும் நெகிழ்திறன் மற்றும் ஆற்றல் மிக்கதாக ஆக்குகிறது.

*கே: தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியை எவ்வாறு அணுகுவது? ஒரு தனிநபர் தங்களைத் தாங்களே எவ்வாறு வளர்த்துக்கொள்ள முடியும் என சில உதவிக்குறிப்புகள் மற்றும் தந்திரங்களை எங்களுக்கு வழங்க முடியுமா?*

## இலக்குகளை அமைத்தல்:

தெளிவான, அடையக்கூடிய இலக்குகளை அமைப்பது முக்கியம். இலக்கை அமைப்பதற்கான SMART Goals என்பது போன்ற நுட்பங்களைப் பயன்படுத்துவது சிறந்தது.

### Specific – குறிப்பிட்டது:

நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள், அது ஏன் முக்கியமானது, யார் இதில் ஈடுபட்டுள்ளனர் என்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் குறிக்கோள் தெளிவாகவும் குறிப்பிட்டதாகவும் இருக்க வேண்டும்.

### Measure – அளவிடக்கூடியது:

இலக்கு அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும், முன்னேற்றத்தை அளவிடுவதற்கும், இலக்கு எப்போது அடையப்பட்டது என்பதைத் தீர்மானிப்பதற்கும் தெளிவான அளவுகோல்கள் இருக்க வேண்டும்.

### Achievable – அடையக்கூடியது:

கிடைக்கக்கூடிய வளங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, இலக்கு யதார்த்தமாகவும் அடையக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

### Relevant –பொருத்தமானது:

உங்கள் குறிக்கோள், பரந்த குறிக்கோள்களுடன் ஒத்துப்போக வேண்டும், அது பயனுள்ளது மற்றும் உங்கள் ஒட்டுமொத்த நோக்கம் அல்லது திட்டத்துடன் நேரடியாகத் தொடர்புடையது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

### Time bound – கால வரம்பு:

இலக்கு ஒரு தெளிவான காலக்கெடுவைக் கொண்டிருக்க வேண்டும், இது அவசர உணர்வை ஏட்படுத்துவதோடு, பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் உதவுகிறது.

## தொடர்ச்சியான கற்றலில் ஈடுபடுதல்:


வாழ்நாள் முழுவதும் கற்றலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், தொடர்ந்து கற்றுக்கொள்வதற்கான பல்வேறு வளிகளை உருவாக்கிக் கொள்வதும் அவசியம். (online courses, mentorship, reading).

## தடைகளைக் கடந்து செல்வது:

பொதுவான சவால்களைப் பற்றி அறிந்து கொண்டு, இந்த தடைகளைக் கடப்பதற்கான குறிப்புகள் என்னவென்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

*கே: இந்த பட்டறைகளைப் பற்றி மேலும் அறிய அல்லது நீங்கள் முன்பு குறிப்பிட்டது போல், மனநல ஆலோசனை மற்றும் உங்கள் உதவியைப் பெறுவதற்காக உங்களை எவ்வாறு தொடர்புகொள்வது என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்த முடியுமா?*

மேலதிக விபரங்களை அறிய 076 973 8967 என்ற வட்ஸ்அப் எண் மூலம் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.









# அருணகிரிநாதர் திருவிழா

**பு.கஜிந்தன்**

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம்–நெல்லையம்பதி அலங்கார கந்தன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் பதினேழாவது மாலை நேரத் திருவிழாவான அருணகிரிநாதர் திருவிழா ஞாயிற்றுக்கிழமை (25) பக்திபூர்வமாக இடம்பெற்றது. இவ் மகோற்சவ கிரியைகளை ஆலய பிரதம சிவஸ்ரீ வைகுந்தன் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் நடத்தி வைத்தனர். கடந்த 09.08.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மஹோற்சம் 25 நாட்கள் இடம்பெறும்.





# புதிய தேர்

**வி.ரி.சகாதேவராஜா**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் வியாழக்கிழமை (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

69 லட்ச ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்ட பாரிய தேர், ஆலயத்தின் முன்னாள் பிரதம குரு அமரர் சிவஸ்ரீ சண்முகரெத்தினம் குருக்கள் குடும்பம் சார்பாக அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

அவரது சிரேஷ்ட புதல்வர் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தற்போது இவ் ஆலயத்தின் பிரதம குருவாக இருக்கிறார்.

அந்த தேரின் வெள்ளோட்டம், வெள்ளிக்கிழமை(05) காலை இடம்பெறும். அதேவேளை, மறுநாள் சனிக்கிழமை (07) தேரோட்டம் இடம்பெறும்.

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலிருந்து கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக கொண்டுவரப்பட்டு வியாழக்கிழமை (29) காலை 7 மணிக்கு கொடியேற்றப்படும்.

செப்டெம்பர் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து பாற்குட பவனி இடம்பெற்று பத்து நாள் தேர்த்திருவிழா உற்சவம் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

தேரோட்டம் செப்டெம்பர் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற இருக்கிறது.

மறுநாள் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவம் இடம் பெறுவதோடு, உற்சவ காலங்களில் தினமும் காலை 9 மணிக்கு பூஜை வசந்த மண்டப பூஜை மாலை 6 மணிக்கு பூஜை வசந்த மண்டப பூஜை திருவிழா வெளிவீதி உலா மற்றும் மாலை 6:30 மணிக்கு நற்சிந்தனையும் இடம்பெறும்.



# விவேகானந்தா பூங்கா திறந்து வைப்பு

**வ.சக்தி**

மட்டக்களப்பு–கல்முனை பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள விவேகானந்த சிறுவர் பூங்கா ஞாயிற்றுக்கிழமை(25) உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு தலைமை தளமாகக் கொண்டு பல சமூக சேவைகளை இரண்டு தசாப்தங்களாக முன்னெடுத்து வரும் சமூக நலன்புரி அமைப்பின் மற்றொரு மகத்தான செயற்பாட்டின் மற்றுமோர் அங்கமாகும்.

விவேகானந்தரின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்குடன் சமூக நலன்புரி அமைப்பின் ஸ்தாபக தலைவர் க.சற்குணேஸ்வரர் ஸ்தாபித்து வழி நடத்தப்படுகின்றது.



# விநாயகர் சிலை கரைக்கும் நிகழ்வு

**செ.தி.பெருமாள்**


இலங்கை வரலாற்றில் முதன் முறையாக விநாயகர் சிலை கரைக்கும் நிகழ்வு கொட்டகலை இலங்கை கிளையின் தலைவர் இராமசாமி விஜயபாலன் அவர்களின் தலைமையில் கொமர்ஸல் நீர் தடாகத்தில் செப்டெம்பர 8ம் திகதி இடம்பெறவுள்ளது.

அதன்படி முதல் விநாயகர் சிலை கொட்டகலை ஹரிங்டன் தோட்டத்திலிருந்து எடுத்து வரப்பட உள்ளது.

அத்துடன் கொட்டகலை பிரதேசத்தின் சுற்றுப்புற 10 தோட்டங்களின் உள்ள ஆலயத்திலிருந்து விநாயகர் சிலைகள் அடியார்களின் பங்கேற்புடன் கொட்டகலை பிரதேச சபையின் முற்றத்தில் ஏனைய சிலைகளின் வீதி உலா ஆரம்பமாகவிருக்கின்றது.

தொடர்ந்து கொட்டகலை நகர் ஊடாக வீதி உலா வருவதோடு, பக்த அடியார்களின் தரிசிப்புடன் கிறிஸ்லஸ்பாம் ஊடாக கொமர்சல் நீர் தடாகம் வந்தடையும்.

அதன் பின்னர் அங்கு இடம்பெறும் பூஜையினையடுத்து விநாயகர் சிலைகள் கரைக்கும் நிகழ்வு இடம்பெறும்.









# 'யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024'

■ பு.கஜிந்தன்

யாழ். தொழில் துறைகளைப் பிரபலப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன், 'யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024' எனும் வர்த்தக கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 24, 25ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

வடக்கு – தெற்கு இடையே ஒரு வர்த்தக ரீதியிலான பாலமாக இந்த கண்காட்சி அமைந்துள்ளது. இதில் தென்பகுதியில் மட்டுமல்லாது, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகிற பொருட்கள் மற்றும் சேவைகள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. சிறுவர்களை மகிழ்விக்கும் விளையாட்டு மற்றும் போட்டி நிகழ்ச்சிகளும் இங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.




# இருவர் தெரிவு

இவ்வாண்டு ஈரானில் இடம்பெறவுள்ள முதலாவது ஆண்களுக்கான உலக கிண்ண போட்டியில் கலந்து கொள்ளும் வகையில் இலங்கையின் தேசிய கடற்கரை கபடி அணிக்கு அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்திலிருந்து இரு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை கபடி அணியைச் சேர்ந்த ஏ.ஜே.எம்.ரிஸ்னி மற்றும் ஏ.ஆர் ஜுமான் ஆகியோரே இவ்வாறு இலங்கை தேசிய கடற்கரை கபடி அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் ஆகும்.

இவ்விருவரும் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




# ஆன்மீக சொற்பொழிவு

■ டி.ஷங்கீதன்




பிரணவ் அறக்கட்டளையின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆன்மீக சொற்பொழிவு ஹட்டன் என்பீல்ட் தமிழ் வித்தியாலயத்தில் சனிக்கிழமை (24) நடைபெற்றது.

இதன்போது இந்தியாவின் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிகர் சுவாமிகள் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான ஆன்மீக சொற்பொழிவை நிகழ்த்தினார்.



# கல்விக்கு கரம் கொடுப்போம்

■ செ.தி.பெருமாள்



World Action Foundation அனுசரணையில் அதன் தலைவர் சுபாஷ் சுந்தர்ராஜனின் வேண்டுகோளுக்கிணங்க லக்கம் த.வி. தரம் ஐந்து இந்த வருடம் புலமைப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு

ஒரு நாள் கருத்தரங்கு, வினாத்தாள்கள் ஞாயிற்றுக்கிழமை (25) வழங்கி வைக்கப்பட்டது.









# 'Aero Bash' 2024

■ அபு அலா

திருகோணமலை–சீனக்குடா விமானப்படை கல்வி பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'எரோ பேஸ்' (Aero Bash) 2024 இறுதி நாள் நிகழ்வு சீனக்குடா விமானப் படை வளாகத்தில் திங்கட்கிழமை (26) இடம்பெற்றது.

கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'Aero Bash' 2024 கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியில் இலங்கை அரச பல்கலைக் கழகங்கள் தனியார் பல்கலைக் கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபார மற்றும் தொழில்நுட்பக் கூடாரங்கள், விமானங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன..

இந்தக் கண்காட்சியில் இலங்கை விமானப் படையின் விமான சாகசங்கள், விமானப்படை பரசூட் வீரர்களின் பரசூட் சாகசங்கள், விமானப்படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்வுகள், விமானப்படை மீட்புக் குழுவினரின் விசேட மீட்பு நடவடிக்கை தொடர்பான காட்சிகள், மற்றும் அங்கம்புர மற்றும் தற்காப்புக் கலை காட்சிகள், விமானப்படை பேண்ட மற்றும் அணிவகுப்பு குழுவினரின் விசேட காட்சிகள், சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள், இரவு நேர இசை நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

'Aero Bash' 2024 கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியின் ஆரம்ப நாள் நிகழ்வை இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.






# கழிவுகளை அகற்றும் பணி...



■ அஸ்லம் எஸ்.மௌலானா

கனேடிய அரசாங்கத்தின் நிதி அனுசரணையில் 'இனங்களுக்கிடையே நட்புறவு ஒன்றியம்' (NEUF) ஏற்பாடு செய்திருந்த பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளைச் சேகரித்து அகற்றும் வேலைத் திட்டம் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மருதமுனை கடற்கரைப் பகுதியில் வியாழக்கிழமை (22) இடம்பெற்ற இதன் ஆரம்ப நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம, கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் ஆகியோர் அதிதிகளாகப் பங்கேற்றிருந்தனர்.





# 221ஆவது நினைவு தினம்

■ க.அகரன்



வன்னி ராஜ்ஜியத்தின் இறுதி மன்னனான பண்டார வன்னியனின் 221ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை (25) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வு, வவுனியா நகர சபை மற்றும் பண்டார வன்னியன் விழாக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரதீஸ்வரன், நகர சபை செயலாளர் அ.பாலகிருபன் மற்றும் தமிழ்மணி அகளங்கன், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிங்கப்பூர்

# 39 பேருடன் கடலில் மூழ்கிய மலேசிய கப்பல்



சிங்கப்பூர் அருகே மலேசிய கடற்படைக்கு செந்தமான கப்பல் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியுள்ளது.

மலேசிய கடற்படைக்கு சொந்தமான கே.டி. பென்டேகர் என்ற கப்பல் சுவீடனில் தயாரிக்கப்பட்டு 1978ஆம் ஆண்டு கடற்படைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் கடற்படையில் இணைக்கப்பட்ட இந்த கப்பல், 45 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கே.டி. பென்டேகர் கப்பல், தென்ஜூங் பெனுயுசிப் பகுதியில் இருந்து 2 கடல்மைல் தொலைவில் வந்து கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக கடலுக்கடியில் ஏதோ ஒரு மர்ம பொருள் இடித்ததில் சேதமடைந்து நீர் உள்ளே புக ஆரம்பித்தது.

உடனடியாக, இது குறித்து கடற்படை தலைமைக்கு தகவல் தெரிவிக்கப்பட, மீட்புக் குழுவினர் கப்பலுக்கு பயணமாகினர். கப்பலில் சேதமடைந்த பகுதியை சீரமைக்க அவர்கள் பெரும் முயற்சி எடுத்தனர். ஆனால், முயற்சி தோல்வியில் முடிய, கப்பல் மெல்ல, மெல்ல மூழ்க ஆரம்பித்தது.

இதையடுத்து, கப்பலில் இருந்த 39 இராணுவ வீரர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். 4 மணி நேரத்தில் கப்பல் முழுவதுமாக கடலில் மூழ்கிவிட்டதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏதேனும் ஏற்படாமல் இருக்க அதிகாரிகள் குழு முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கி தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

பீஜிங்



குழந்தை பிறப்பு குறைவதை தடுக்க

## சீனாவின் புதிய திட்டம்

குழந்தை பிறப்பு விகிதம் குறைவதை கட்டுப்படுத்த, திருமணம் செய்வதை எளிதாக்கவும் விவாகரத்து செய்வதை கடினமாக மாற்றவும் சீன அரசு திட்டமிட்டுள்ளது.

உலக மக்கள் தொகையில் முன்னணியில் இருந்து வந்த சீனா, கடந்த 40 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளால், அதை கட்டுப்படுத்தியுள்ளது. இதனால், ஒட்டு மொத்தமாக சீனாவில் இளைய தலைமுறையினர் எண்ணிக்கை கணிசமாக குறைந்திருக்கிறது. இதனால் எதிர்காலத்தில் நாடு ஆளற்றதாகி விடும் என்ற பிரச்சினைக்கு தீர்வு காண, விதிகளை தளர்த்தி, மூன்று குழந்தைகள் வரை பெற்றுக்கொள்ளலாம் என அரசு அனுமதி அளித்தாலும், பிறப்பு விகிதம் உயரவில்லை. மாறாக இறப்பு விகிதமே உயர்ந்தது.

குழந்தை பிறப்பு குறைந்து போனதற்கு, ஆண்களுக்கு திருமணம் செய்ய பெண்கள் கிடைப்பதில்லை. போதிய வருமானம் இல்லாததால் ஆண்களில் பலர் திருமணம் செய்ய தயக்கம் காட்டுகின்றனர். பெண்கள், வேலைக்கு செல்வதால் திருமணம் செய்வதை தள்ளிப்போடுகின்றனர். இதற்கு தீர்வாக, விவாகரத்து செய்வதை கடினமாக்கவும், திருமணத்தை எளிதாக்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி, அவ்வளவு எளிதில் நீதிமன்றத்தில் விவாகரத்து கிடைக்காது. அதே நேரம் திருமணம் செய்வதாக இருந்தால், தேவையான உதவிகளும் கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

கயா

மேற்கு ஆபிரிக்க தாக்குதலில்

# 200 பேர் சுட்டுக்கொலை

மேற்கு ஆபிரிக்காவின் புர்கினா பாசோவில் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 200 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

புர்கினா பாசோவில் இராணுவ ஆட்சி அமைந்த பிறகு, அல்கொய்தா உள்ளிட்ட அமைப்புகளின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், சனிக்கிழமை (24) அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய, நஸ்ரத் அல் இஸ்லாம் வால் முஸ்லிமின் எனும் அமைப்பு மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என 200 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், 140க்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நோர்வே அகதிகள் கவுன்சில் வெளியிட்டுள்ள பட்டியலில், உலகளவில் புலம்பெயர் மக்கள் அதிக பிரச்சினைகளை சந்திக்கக் கூடிய நாடாக புர்கினா பாசோ உள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் இங்கு 8,400 பேர் கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாட்னா

இளைஞனின் வயிற்றிலிருந்த

# அதிர்ச்சி தரும் பொருட்கள்

பீகார் மாநிலத்தில் 22 வயது இளைஞனின் வயிற்றில் இருந்து கத்தி, நகம் வெட்டி உள்ளிட்ட பொருட்களை மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர்.

கிழக்கு சம்ப்ரான் மாவட்டத்தில் உள்ள மோதிஹரி தனியார் மருத்துவமனையில் இளைஞர் யாஷ் என்பவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். கடந்த சில நாட்களாக வயிற்று வலியால் அவதிப்படுவதாகவும், உடனடி சிகிச்சை அளிக்குமாறும் அவரது பெற்றோர் தெரிவித்தனர்.

குறித்த இளைஞரை பரிசோதித்த மருத்துவர்கள் அவரது வயிற்றில் ஏதோ வித்தியாசமான பொருட்கள் இருப்பதைக் கண்டு, உடனடியாக அவருக்கு அறுவை சிகிச்சை அவசியம் என்று கூறி அதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

அறுவை சிகிச்சை முடிந்த பின்னர், இளைஞனின் வயிற்றில் இருப்பதைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ந்தே போய்விட்டனர். கொத்துச்சாவி, கத்தி, நகம் வெட்டி, சாவி வளையம் உள்ளிட்ட பல உலோக பொருட்கள் அவரது வயிற்றில் இருந்துள்ளன. அதைத்தான் மருத்துவர்கள் குழு அகற்றி உள்ளது.

இதுகுறித்து மருத்துவர் ஒருவர் கூறுகையில், "அறுவை சிகிச்சைக்குப் பின் இளைஞர் நல்ல உடல்நலத்துடன் உள்ளார், அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர். பசி எடுக்கும் சமயத்தில் எல்லாம் உலோக பொருட்களை சாப்பிட்டிருக்கிறார். அவரது வயிற்றில் இருந்து கொத்து சாவிகள், 4 இஞ்ச் நீளம் கொண்ட கத்தி, 2 நகம்வெட்டி உள்ளிட்டவை அகற்றப்பட்டு உள்ளன. தொடர்ந்து அவரை கண்காணிப்பில் வைத்துள்ளோம் என்றார்.

செல்போன், ரீல்ஸ் வீடியோ, ஒன்லைன் விளையாட்டுகளில் அவர் அதிகம் ஆர்வம் கொண்டவர் என்றும் அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சென்னை

## "துரைமுருகன் எனது நண்பர்"



"பல்லுப்போன மூத்த நடிகர்" என்று துரைமுருகன் கிண்டலுக்கு ஆளான நடிகர் ரஜினி, "அமைச்சர் துரைமுருகன் எனது நண்பர், அவருடன் எனது நட்பு தொடரும்" என்று கூறியுள்ளார்.

மூத்த அமைச்சர்களை வைத்து, தமிழக அரசை ஸ்டாலின் அரசு நடத்துவது பற்றி, சென்னையில் நடந்த விழாவில், நடிகர் ரஜினி கிண்டலாக பேசினார்.

"ஒரு வகுப்பில் புதிய மாணவர்கள் வந்தால் எளிதில் சமாளித்து விடலாம். பழைய மாணவர்கள் இருந்தால் சமாளிப்பது கஷ்டம். அதிலும், துரைமுருகன் இருக்கிறார் அவர் கருணாநிதி கண்ணிலேயே விரல் விட்டு ஆட்டியவர்" என்றெல்லாம், கிண்டலாகப் பேசினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் துரைமுகன், 'மூத்த நடிகர்கள் பல்லுப்போய், வயதாகி, தாடி வளர்த்துக்கொண்டும் நடிப்பதால் தான் இளைஞர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை" என்று கூறினார். துரைமுருகன் கிண்டல், இணையத்தில் வைரலாக பரவியது.

# இலங்கை அணியில் மன்னார் கிதுஷன்



■ எஸ்.ஆர்.லெம்பேட்

இலங்கை தேசிய 17 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் கிதுஷன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

பல வீரர்களை தேசிய அணிக்கு மன்னாரிலிருந்து அனுப்பிய புனித சவேரியார் பாடசாலை ஏழாவது மாணவனாக கிதுஷனை தேசிய அணிக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சம்பியனானது புதிய காத்தான்குடி வடக்கு



■ அஸ்ஹர் இப்றாஹீம்

காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக காத்தான்குடி பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் தொடரில் புதிய காத்தான்குடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு சம்பியனானது.

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் கலந்து கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் புதிய காத்தான்குடி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவை வென்றே புதிய காத்தான்குடி வடக்கு பிரிவு சம்பியனானது.

## தொடரைக் கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்ற மே. தீவுகள், ட்ரினிடாட்டில் திங்கட்கிழமை(26) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தெ. ஆபிரிக்கா

மே. தீவுகள்: 179/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷே ஹோப் 41 (22), றொவ்மன் பவல் 35 (22), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் 29 (18), அலிக் அதனஸே 28 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: லிஸார்ட் வில்லியம்ஸ் 3/36 [4], பற்றிக் குறூகர் 2/29 [4], ஒட்னெய்ல் பார்ட்மன் 1/32 [4]).

தெ. ஆபிரிக்கா: 149/10 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: றீஸா ஹென்ட்ரிக்ஸ் 44 (18), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 28 (24), றையன் ரிக்கெல்டன் 20 (13), ஏய்டன் மார்க்ரம் 19 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷாமர் ஜோசப் 3/31 [4], றொமாரியோ ஷெப்பர்ட் 3/15 [4], அகீல் ஹொஸைன் 2/25 [4], குடகேஷ் மோட்டி 1/27 [4])

போட்டியின் நாயகன்: றொமாரியோ ஷெப்பர்ட்




## நெதர்லாந்து குரான் பிறீ: வென்றார் லான்டோ நொரிஸ்

நெதர்லாந்து குரான் பிறீயில் பிரித்தானியாவின் லான்டோ நொரிஸ் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை ( 25) நடைபெற்ற இப்பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்தபோதும் நடப்புச் சம்பியனான நெதர்லாந்தின் மக்ஸ் வெர்ஸ்டப்பனால் முந்தப்பட்டபோதும் மீண்டும் 18ஆவது சுற்றில் அவரை மீண்டும் முந்தியே மக்லரென் அணியின் நொரிஸ் வென்றார்.

றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பன் இரண்டாமிடத்தைப் பெற, பந்தயத்தை ஆறாமிடத்திலிருந்து ஆரம்பித்த மொனாக்கோவின் சார்ள் லெக்கலெர்க், மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 295 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் வெர்ஸ்டப்பன் உள்ளார். இரண்டாமிடத்தில் 225 புள்ளிகளுடன் நொரிஸூம், 192 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பெறாரி அணியின் லெக்கலெர்க்கும் காணப்படுகின்றனர்.



## உலக சாதனைகள் முறியடிப்பு

போலந்தில் நடைபெறும் டயமன்ட் லீக்கில் தனது கோலூன்றின் பாய்தல் உலக சாதனையை சுவீடனின் அர்மன்ட் டுப்லான்ட்ஸ் முறியடித்ததோடு, 3,000 மீற்றர் உலக சாதனையை மூன்று செக்கன்களால் நோர்வேயின் ஜாக்கோப் இங்கிபிரிட்சன் வென்றுள்ளார்.

போட்டித் தூரத்தை ஏழு நிமிடங்கள் 17.55 செக்கன்களில் 28 வயதான இங்கிபிரிட்சன் தாண்டிய நிலையில், இதற்கு முன்னர் 1996இல் கென்யாவின் டேனியல் கூமனின் ஏழு நிமிடங்கள் 20.67 செக்கன்களில் போட்டித் தூரத்தில் கடந்ததே சாதனையாக இருந்தது.

இதேவேளை 24 வயதான டுப்லான்டிஸ் 10ஆவது தடவையாக தனது உலக சாதனையை முறியடித்து 6.26 மீற்றர் தூரம் பாய்ந்திருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 27, ஆகஸ்ட் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.